DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF THE I ADDITIONAL DISTRICT JUDGE, TIRUVALLUR**

OS.No : 80/2021 PW : 1

Name : சந்திரன் Age –

S/o : சுப்பிரமணி Village

Taluk

Solemnly affirmed in accordance with the provision of Act of 1873 on the day of

---

Date: 12.08.2025.

**<u>1ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

1) யாரிடமிருந்து என் தகப்பனார் கிரையம் வாங்கினார் என்ற விபரம் தெரியாது. எந்த எந்த சர்வே எண்ணில் கிரையம் வாங்கினார் என்ற விபரம் தெரியாது. 2017ம் ஆண்டிற்கு பிறகு பினாபி பெயரில் வாங்கியதாக என்னால் கோரிக்கை வைக்க இயலாது என்று சொன்னால் சரியல்ல. எங்கள் குடும்பத்தில் நான் தான் மூத்தவர். பொதுவாக கூட்டு குடும்பத்தில் சொத்துக்கள் வாங்கும் போது தந்தை பெயரிலோ அல்லது மூத்த மகன் பெயரிலோ வாங்குவது வழக்கம் என்றால் என் பெயரில் கிரையம் வாங்கிய சொத்துக்களை என் தந்தை கிரையம் கொடுத்துவிட்டார். என் தம்பி பெயரில் வாங்கிய சொத்துக்களை இன்னும் விற்காமல் இருக்கிறார். என் தந்தை உயில் எழுதிவைக்கும் போது நான் மூத்த மகன் என்பதால் என் பெயரில் 2 ஏக்கர் அதிகமாக எழுதிவைத்துள்ளார் என்றால் சரிதான். அந்த உயிலை நான் படித்து பார்த்தேன். அதில் 8.15 ஏக்கர் நிலம் கொடுத்துள்ளார். எனது தம்பிக்கு 6.30 ஏக்கர் நிலம் கொடுத்துள்ளார். என்னுடைய 3வது தம்பி சண்முகத்திற்கு 6.30 நிலம் கொடுத்துள்ளார். என் தந்தை 2006ம் ஆண்டு காலமானார். என் தந்தை இறந்த பிறகு உயில்படி அவரவர் பாகத்தை அவரவர் அனுபவித்து வருகிறோம் என்றால் சரிதான். எனக்கு ஒதுக்கப்பட்ட 8.15 ஏக்கர் நிலத்தை 15 ஆண்டுகளாக நான் தான் அனுபவித்து வருகிறேன் என்றால் சரிதான்.

2) ராஜேந்திரன் பெயரில் உள்ள நிலத்தை இன்றைய தேதி வரை அவ்ர தான் அனுபவித்து வருகிறா்ர என்றால் சரிதான். தாவாவில் காண்பிக்கப்பட்டுள்ள ஏ அட்டவணை சொத்து என் அப்பா மற்றும் அம்மாவிற்காக உயிலில் நிற்த்தி வைக்கப்பட்ட சொத்து என்றால் சரிதான். தாவா பி மற்றும் சி அட்டவணை சொத்துக்கள் ராஜேந்திரன் பெரியல் உள்ள சொத்துக்கள் என்றால் சரிதான். இந்த வழக்கில் 7 மற்றும் 8 பிரதிவாதிகளை சேரத்துள்ளேன். அவ்ரகள் இன்றைய தேதிவரை நிலம் எடுத்தற்குண்டான பணத்தை கொடுத்ததில்லை. 1ம் பிரதிவாதி ராஜேந்திரன் தான் தனிப்பட்ட உரிமையாள்ர என்ற முறையில் 7, 8 பிரதிவாதிகள் அதற்குண்டான பணத்தை கொடுத்துள்ளா்ரகள் என்றால் சரியல்ல. என் தந்தை உயிருடன் இருக்கும் போது Co-operative society நிலம் மற்றும் அவருடைய நிலத்தை பரிவ்ரதனை செய்து கொண்டா்ரகள் என்றால் சரிதான். அந்த நிலம் சம்மந்தமாக பிரச்சனை ஏற்படும் போது என் தந்தை உய்ர நீதிமன்றத்தில் ரிட் எண்.42659/2002 தாக்கல் செய்தா்ர என்றால் சரிதான். அதில் என் தந்தை இந்த தாவா அட்டவணை பி மற்றம் சி செட்டியூல் சொத்து ராஜேந்திரனுக்கு பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்துளளா்ர என்றால் அதை பற்றி தெரியாது. அந்த சொத்து கூட்டுகுடும்ப சொத்தாக இருந்தால் என்னையும் ஒரு தரப்பினராக ரிட் மனுவில் சேரத்திருப்பா்ரகள் என்றாலும், அவ்வாறு சேரக்காததால் அந்த சொத்து கூட்டுகுடும்ப சொத்து கிடையாது என்றால் சரியல்ல.

3) 1971ம் ஆண்டு திருமணம் நடைபெற்றது. 1ம் பிரதிவாதி ராஜேந்திரனுக்கு 1973ம் ஆண்டு திருமணம் நடந்தது. திருமணம் ஆன தேதியிலிருந்து தனிதனியாக இருந்தோம் என்றால் நாங்கள் கூட்டுகுடும்பமாக இருந்தோம். திருமணம் ஆகி 20 ஆண்டுகள் வரை நாங்கள் கூட்டுகுடும்பமாக இருந்தோம். மேற்படி 20 ஆண்டுகள் என் தந்தையும் எங்களுடன் தான் இருந்தா்ர. அதன் பின் தனித்தனியாக வசித்து வந்தோம். வழக்கு தாக்கல் செய்த தேதியில் நான் கூட்டாக எந்த சொத்திலும் இல்லை என்று சொன்னால் சரிதான். 2003ம் ஆண்டு தான் உயில் எழுதப்பட்டது என்றால் சரிதான். கூட்டுகுடும்ப சொத்து மீதம் இருந்ததிருந்தால் அதன் விபரம் என் தந்தை உயிலில்

சொல்லியிருப்பார் என்றாலும், அவ்வாறு இல்லாததால் அவ்ர உயிலில் அதை பற்றி சொல்லவில்லை என்றால் சரிதான். என் தாயார் 2011ம் ஆண்டு காலமானார். எனக்கும் என் சகோதர்களுக்கு எந்த ஆண்டில் பிரச்சனை ஏற்பட்டது எனக்கு ஞாபகமில்லை. தற்போது தாவா ஏ அட்டவணை சொத்து மட்டும் தான் பாகப்பிரிக்கப்பட வேண்டும் என்றால் சரிதான்.

4) என் தம்பி தாவா ஏ அட்டவணை சொத்தை பிரிக்க எந்த வித ஆட்சேபணையும் இல்லை என அவருடைய பதிலுரையில் குறிப்பிட்டுள்ளார் என்ற விபரம்தெரியாது. தாவா ஏ அட்டவணை சொத்தில் பாகம் கேட்பதற்காக நான் ராஜேந்திரனுக்கு சொந்தமான தனிப்பட்ட சொத்துக்களை இந்த வழக்கில் சேர்த்துள்ளேன் என்றால் அது பொதுவில் வாங்கிய சொத்து என்பதால் சேர்த்துள்ளேன். பொதுவில் வாங்கிய சொத்து என்பதற்கு எந்த வித ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. நானும், 1ம் பிரதிவாதியும் 1973லிருந்து தனித்தனியாக வாழ்ந்து வருகிறோம் என்றால் சரியல்ல. ராஜேந்திரன் பால் மற்றும் நெல் வியாபாரம் செய்த பணத்தை வைத்து தான் 1976 மற்றும் 1977ம் ஆண்டில் தாவா பி மற்றும் சி அட்டவணை சொத்தை கிரையம் வாங்கியுள்ளார் என்று சொன்னால் சரியல்ல. எங்கள் குடும்பத்தில் இருந்த ரைஸ் மில்லை எனக்கும், எனது இளளை சகோதர்ர சண்முகத்திற்கும் கொடுத்துள்ளார்கள். எனது தகப்பனார் எனக்கு தான் அதிகமாக பாகமும், ரைஸ்மில்லும் கொடுத்துள்ளார் என்றாலும் தற்போது 1ம் பிரதிவாதியின் தனிப்பட்ட சொத்துக்களை நான் பாகம் கோறுவது செல்லத்தக்கதல்ல என்றால் சரியல்ல. நான் கூட்டு அனுபவத்தில் இருப்பதாக சொல்லி இந்த தாவாவை தாக்கல் செய்துள்ளது தவறு என்றால் சரியல்ல.

**8ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணைக்காக ஒத்திவைக்கப்படுகிறது.**

Taken to my dictation and corrected by me in open court read over to the witness and admitted by him as correct.

S TASNEEM Digitally signed by S TASNEEM Date: 2025.08.12 18:25:29 +0530

I Additional District & Sessions Judge,
Tiruvallur.